


# வரவு – செலவுத் திட்டம் குறித்த குடிமக்களுக்கான கையேடு

## 2023-2024

# வரவு – செலவுத் திட்டம்
# குறித்த குடிமக்களுக்கான கையேடு
# 2023-24



கொடையளி செங்கோல் குடியோம்பல்
நான்கும் உடையானாம் வேந்தர்க் கொளி

(குறள் – 390)

*நல்வாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.*

# வரவு – செலவுத் திட்டம் 2023-24

## வரவு – செலவுத் திட்டத்தின் பொருண்மைகள்

- திறன் மேம்பாடு மற்றும் வேலை வாய்ப்பளித்தல்
- பெண்கள் முன்னேற்றம்
- விளிம்பு நிலையில் உள்ளோரின் சமூக-பொருளாதார முன்னேற்றம்
- அனைத்து தளங்களிலும் சமூக நீதியை உருவாக்குதல்
- கட்டமைப்பு வளர்ச்சியினை ஊக்குவித்தல்
- சமச்சீர் வளர்ச்சியை எய்துதல்

## வரவு – செலவுத் திட்டத்தின் மொத்த மதிப்பு**

**மொத்த செலவினங்கள்**
**₹ 3,65,321 கோடி**

**மொத்த வரவினங்கள்**
**₹ 2,73,246 கோடி**




## மொத்த வரவினங்கள் மற்றும் செலவினங்கள்

**பொதுக் கடன் நீங்கலாக


## மாநிலத்தின் வருவாயினங்கள்

2023-24 ஆம் ஆண்டுக்கான வருவாய் வரவினங்கள் 2,70,515 கோடி ரூபாயாக அரசு மதிப்பீடு செய்துள்ளது. இது 2022-23 ஆம் ஆண்டை விட (திருத்த மதிப்பீடுகள்) 10.1 சதவீதம் அதிகமாகும். அரசின் சொந்த வரிகள் வாயிலாக பெறப்படும் வருவாய் 19.3 சதவீதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.




| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் | ஒன்றிய அரசிடமிருந்து பெறும் உதவி மானியங்கள் | மத்திய வரிகளில் பங்கு |
|---|---|---|---|
| ₹ 1,81,182 கோடி | ₹ 20,223 கோடி | ₹ 27,445 கோடி | ₹ 41,665 கோடி |

## மாநிலத்தின் சொந்த வரி வருவாய்




## மாநிலத்தின் செலவினங்கள்

2023-24 ஆம் ஆண்டிற்கான அரசின் மொத்த செலவினங்கள் 3,65,321 கோடி ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது 2022-23 (திருத்த மதிப்பீடுகள்) ஆம் ஆண்டை விட 13.7 சதவீதம் அதிகமாகும்.

## வருவாய்ச் செலவினங்கள்

பெருமளவில், ஏழை எளிய மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களுக்காக செலவினங்கள் மேற்கொள்ளப்படுகிறது.




## மூலதனச் செலவினங்கள்

மூலதனப் பணிகளுக்கு செலவிடுவதன் மூலம் பொருளாதார வளர்ச்சிக்கான உத்வேகத்தை அரசு அளிக்கும். 2023-24 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவு 44,366 கோடி ரூபாயாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது 2022-23 (திருத்த மதிப்பீடுகள்) ஆம் ஆண்டை விட 15.7 சதவீதம் அதிகமாகும்.

### முக்கியத் துறைகளுக்கான மூலதனச் செலவினம்



சாலைகள் மற்றும் பாலங்கள்

₹ 17,421 கோடி



போக்குவரத்துத் துறை

₹ 2,900 கோடி



நகர்ப்புற வளர்ச்சி

₹ 3,719 கோடி



குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டங்கள்*

₹ 8,596 கோடி



பாசன கட்டமைப்புகள்

₹ 4,559 கோடி



கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறைகள்

₹ 2,731 கோடி


**மொத்த மூலதனச் செலவு 44,366 கோடி ரூபாய்**

*திட்ட முகமைக்கு நேரடியாக வழங்கப்படும் தொகை உட்பட


## மாநிலத்தின் வரவு – செலவுத் திட்டம் - பற்றாக்குறை

இந்த அரசு மேற்கொண்ட அடிப்படை சீர்திருத்தங்கள் மற்றும் திறன்மிகு நிதி நிருவாகத்தின் காரணமாக, தமிழ்நாட்டின் வருவாய்ப் பற்றாக்குறை இந்த ஆண்டு சுமார் 16,062 கோடி குறையும். நிதிப் பற்றாக்குறை இந்த ஆண்டு மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த ஆண்டில், மக்கள் நலத் திட்டங்களை பெருமளவில் செயல்படுத்திடும் வகையில் நிதி ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படும்.


### வருவாய்ப் பற்றாக்குறையின் போக்கு





### மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறையின் போக்கு




# ஒரு ரூபாய் எவ்வாறு திரட்டப்படுகிறது




# ஒரு ரூபாய் எவ்வாறு செலவிடப்படுகிறது



# 2023-24 வரவு செலவுத் திட்டத்தில் முக்கியத் துறைகள் சார்ந்த நிதி ஒதுக்கீடுகள்




வருவாய்ச் செலவினம், மூலதனச் செலவினம் மற்றும் கடன் வழங்குதலைக் குறிக்கின்றது

# புதிய அறிவிப்புகள் - முக்கிய அம்சங்கள்



**மகளிர் உரிமைத் தொகை**

**₹7,000 கோடி**



**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்**

**₹100 கோடி**

ஆதிதிராவிட / பழங்குடியின தொழில் முனைவோரின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்



**அண்ணல் அம்பேத்கரின் படைப்புகள் தமிழில் மொழிபெயர்ப்பு**

**₹ 5 கோடி**



**முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்**

**₹ 500 கோடி**

30,122 அரசுத் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவாக்கம்



**தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம்**



**தமிழ்நாடு நெய்தல் மீட்சி இயக்கம்**

**₹ 2,000 கோடி**

கடல் அரிப்பைத் தடுத்தல், கடல் மாசுபாட்டைக் குறைத்தல், கடல்சார் உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாத்தல்



**அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் – திறன்மிகு மையங்கள்**

**₹ 2,783 கோடி**

54 அரசு பல்தொழில்நுட்பக் கல்லூரிகளை நவீனப்படுத்தல், தரம் உயர்த்தல்



**தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம்**

ஈரோடு மாவட்டத்தில் மாநிலத்தின் 18வது வனவிலங்கு சரணாலயம்



**சென்னையில் உலகளாவிய அதிநவீன விளையாட்டு நகரம்**



**கோயம்புத்தூரில் செம்மொழிப் பூங்கா**

**₹172 கோடி**


உலகத்தரம் வாய்ந்த தாவரவியல் பூங்கா

# புதிய அறிவிப்புகள் - முக்கிய அம்சங்கள்



**அடையாறு ஆற்றின் நீர்வழிகளை சுத்தப்படுத்தி மறுசீரமைத்தல்**

**₹1,500 கோடி**



**கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களில் மெட்ரோ இரயில் திட்டம்**

**₹ 17,500 கோடி**



**வளமிகு வட்டாரங்கள் திட்டம்**

**₹ 250 கோடி**

மிகவும் பின்தங்கிய 50 வட்டாரங்களில் வளர்ச்சிப் பணிகள்



**உலக முதலீட்டாளர்கள் மாநாடு - 2024**

**₹ 100 கோடி**




**வடசென்னை வளர்ச்சி திட்டம்**

**₹ 1,000 கோடி**



**இலவச வைஃபை சேவைகள்**

சென்னை, தாம்பரம், ஆவடி, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி மற்றும் சேலம் மாநகராட்சிகளின் முக்கியப் பொதுஇடங்களில் இலவச வைஃபை சேவைகள்



**நான்கு வழி மேம்பாலம்**

**₹ 621 கோடி**

சென்னை, அண்ணாசாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை



**தமிழ்நாடு தொழில்நுட்ப நகரங்கள்**

சென்னை, கோயம்புத்தூர் மற்றும் ஓசூர்



**1000 புதிய பேருந்துகள் கொள்முதல் மற்றும் 500 பழைய பேருந்துகள் புதுப்பித்தல்**

**₹ 500 கோடி**



**பல்வேறு துறைகளின் கீழ் செயல்படும் அனைத்துப் பள்ளிகளையும் பள்ளிக் கல்வித்துறையின் கீழ் கொண்டுவரப்படும்**

# செயல்பாட்டில் உள்ள முக்கியத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு



### தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு நிதியுதவி

**₹ 14,063 கோடி**

வேளாண்மை, வீடுகளுக்கான மின் நுகர்வு போன்றவற்றிக்கு உதவித் தொகை



### கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

**₹ 1,000 கோடி**



### பொது விநியோகத் திட்டத்திற்கு மானியம்

**₹ 10,500 கோடி**



### முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம்

**₹ 1,416 கோடி**



### கடன் தள்ளுபடி திட்டங்கள்

**₹ 3,993 கோடி**

பயிர்க்கடன் தள்ளுபடி ₹ 2,393 கோடி

நகைக்கடன் தள்ளுபடி - ₹ 1,000 கோடி

மகளிர் சுயஉதவிக்குழு கடன் தள்ளுபடி - ₹ 600 கோடி



### தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதியுதவி

**₹ 6,722 கோடி**

மகளிருக்கு பேருந்துகளில் இலவச பயணச்சீட்டு; மாணாக்கர்களுக்கான இலவச பயணச்சீட்டு மற்றும் பயணச்சலுகை; டீசல் மானியங்கள்



### சிங்காரச் சென்னை 2.0

**₹ 500 கோடி**



### மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்

**₹ 3,100 கோடி**

100 நாள் வேலை உறுதித் திட்டம்



### குடிநீர் வழங்கல் *

**₹ 6,600 கோடி**

உயிர் நீர் இயக்கம் (ஜல் ஜீவன்)

*திட்ட முகமைக்கு நேரடியாக வழங்கப்படும் தொகை உட்பட



### நான் முதல்வன்

**₹ 50 கோடி**

# செயல்பாட்டில் உள்ள முக்கியத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு



**மீனவர் நலன்**

₹ 427 கோடி



**சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்**

₹ 4,469 கோடி

முதியோர் ஓய்வூதியம், விதவை ஓய்வூதியம் போன்றவை



**ஆதிதிராவிடர் / பழங்குடியினர் புத்தொழில்கள் நிதி**

₹ 50 கோடி



**பள்ளிக் குழந்தைகள்**

₹ 1,637 கோடி

பாடப்புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள், சீருடைகள், காலணிகள் மற்றும் மிதிவண்டிகள்



**மாற்றுத் திறனாளிகள் நலன்**

₹ 1,500 கோடி

பராமரிப்பு உதவித் தொகை மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஓய்வூதியம்



**புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்**

₹ 4,513 கோடி



**சென்னை மெட்ரோ இரயில் திட்டம்**

₹ 10,000 கோடி



**மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு புதுமை பெண் திட்டம்**

₹ 350 கோடி

அரசுப் பள்ளிகளில் பயின்று (6-12) தேர்ச்சி பெற்று உயர் கல்வி தொடரும் மாணவிகளுக்கு



**தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம்**

₹ 150 கோடி



**குறு நிறுவன குழும மேம்பாட்டுத் திட்டம்**

குறு நிறுவன குழுமங்களை மேம்படுத்துதல்

₹ 75 கோடி

# வரவு செலவுத் திட்டம்-ஒரு கண்ணோட்டம்

ரூ. கோடியில்

| வ.எண் | வகைப்பாடு | 2021-2022 கணக்குகள் | 2022-2023 திருத்த மதிப்பீடு | 2023-2024 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| 1. | மொத்த வருவாய் வரவுகள் | 2,07,492 | 2,45,660 | 2,70,515 |
| 2. | மொத்த வருவாய் செலவினம் | 2,54,030 | 2,76,136 | 3,08,055 |
| 3. | வருவாய் பற்றாக்குறை | (-) 46,538 | (-) 30,476 | (-) 37,540 |
| 4. | மூலதனச் செலவினம் | 37,011 | 38,347 | 44,366 |
| 5. | மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிதிப் பற்றாக்குறை % | (-) 3.38% | (-) 3.00% | (-) 3.25% |

# சொற்களஞ்சியம்

**அ) வருவாய் வரவினம்:**

மாநில அரசு விதிக்கும் வரிகள் மற்றும் தீர்வைகள் மூலம் பெறப்படும் வருவாய் மற்றும் சேவைகளுக்கான கட்டணங்கள், அபராதம், தண்டத் தொகைகள் போன்ற வரியல்லாத வருவாய், மத்திய வரிகளில் பங்கு மற்றும் ஒன்றிய அரசிடமிருந்து திட்டங்களுக்காக பெறப்படும் உதவித் தொகை ஆகியவற்றை உள்ளடக்கியது ஆகும்.

**ஆ) வருவாய்ச் செலவினம்:**

அரசு பணியாளர்களுக்கான சம்பளங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வூதியப் பலன்கள், அரசின் செயல்முறைகள் மற்றும் பராமரிப்புச் செலவினம், நிலுவையிலுள்ள கடன்களுக்கான வட்டி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கப்படும் நிதிப் பகிர்வு உள்ளிட்ட உதவித் தொகைகள், பொதுமக்கள் மற்றும் அரசு அமைப்புகளுக்கு வழங்கப்படும் மானியங்கள், படிப்புதவித் தொகைகள், பங்களிப்புகள் போன்றவை இதில் அடங்கும்.

**இ) மூலதனச் செலவினம்:**

சாலைகள் மற்றும் பாலங்கள், பாசன அமைப்புகள், பள்ளி மற்றும் மருத்துவமனை கட்டடங்கள் போன்ற அசையா சொத்துக்களை உருவாக்குவதற்காகவும் பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்வதற்காகவும் மூலதனச் செலவினம் மேற்கொள்ளப்படுகிறது.

**ஈ) கடன்கள் மற்றும் முன்பணங்கள்:**

மாநில பொதுத் துறை நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்கள் முதலியவற்றுக்கு அரசால் விடுவிக்கப்படும் தொகைகள் கடன் செலவினமாகும். அத்தகைய நிறுவனங்களிடமிருந்து திரும்பப் பெறப்படும் கடன்கள் மற்றும் முன்பணங்கள் வரவினமாக கருதப்படும்.

**உ) வருவாய் உபரி / வருவாய்ப் பற்றாக்குறை:**

வருவாய்ச் செலவினத்தைக் காட்டிலும் வருவாய் வரவினங்கள் அதிகமாக இருப்பின் அது வருவாய் உபரி எனப்படும். வருவாய் வரவினங்களைக் காட்டிலும் வருவாய்ச் செலவினம் அதிகமாக இருப்பின் அது வருவாய்ப் பற்றாக்குறை ஆகும்.

**ஊ) நிதிப் பற்றாக்குறை:**

மொத்த வரவினங்களுக்கும் (அதாவது வருவாய் மற்றும் மூலதன வரவினங்கள்) மற்றும் மொத்த செலவினங்களுக்கும் (அதாவது வருவாய்ச் செலவினம் மற்றும் அரசு வழங்கும் நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் உள்ளிட்ட மூலதனச் செலவினம்) உள்ள வித்தியாசம் நிதிப் பற்றாக்குறை ஆகும்.

**எ) கடன்:**

பற்றாக்குறையினை சமாளிப்பதற்கு அரசு திரட்டும் கடன்களை குறிக்கும்.

குறிப்பு: அனைத்து வரவு-செலவுத் திட்ட ஆவணங்களையும் கீழ்காணும் இணையத்தின் வாயிலாக பார்க்கவும் / பதிவிறக்கவும் இயலும் *https://www.financedept.tn.gov.in*

நிதித் துறை
தமிழ் நாடு அரசு
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை -600009

**நிதித் துறை**
**தமிழ் நாடு அரசு**
**புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.**

Website : https://www.financedept.tn.gov.in